இந்துசமய அறநிலையத்துறை

# யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் 2017–18

## தேக்கம்பட்டி – மேட்டுப்பாளையம்

மின்னஞ்சல் : elephantcamp@tnhrce.org
தொலைபேசி எண்: 04254–297981

நாள் 14.01.2018

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில் அருகிலுள்ள பவானி ஆற்றுப்படுகையில் நடைபெற்று வரும் யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாமில் இன்று பொங்கல் திருநாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. முகாமில் அமைந்துள்ள விநாயகர் திருக்கோயில் முன்பாக மண்பானையில் பொங்கல் வைக்கப்பட்டது. இவ்விழாவில் தலைமையிடத்து இணைஆணையர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். பாகன்கள் மற்றும் முகாமில் உள்ள அனைவருக்கும் பொங்கலுடன் கூடிய சிறப்பு மதிய விருந்து வழங்கப்பட்டடது.





பொங்கல் விழா போட்டிகளின் தொடர்ச்சியாக இன்று இறகு பந்து போட்டி நடத்தப்பட்டது. ஆணையர் அலுவலக சட்டசேர்ம இணை ஆணையர் அவர்கள் முகாமிற்கு வருகை புரிந்து போட்டியினை துவக்கி வைத்தார்.



யானைகளுக்கென மருத்துவர் குழுவினாரால் பரிந்துரைக்கப்பட்ட சிறப்பு உணவு வகைகள் இணை ஆணையர்களால் யானைகளுக்கு உபயமாக வழங்கப்பட்டன. மேலும் புத்தாடைகள் பாகன்களுக்கு இணை ஆணையர்களால் உபயமாக வழங்கப்பட்டன



சட்டசேர்ம இணை ஆணையர் அவர்கள்முகாம் முழுவதும் ஆய்வு செய்து முகாம் சிறக்க சில குறிப்புகள் வழங்கினார். யானைகள் வழக்கம்போல் நடைபயிற்சி மேற்கொண்டு பூவாளி குளியல் மேடையில் ஆனந்தமாய் நீராடின. கால்நடை மருத்துவக்குழுவினர் அனைத்து யானைகளையும் தனித்தனியே பரிசோதித்து மருத்துவ ஆலோசனைகள் மற்றும் மருந்துகள் வழங்கினர்.





பசுந்தீவனம், சாத உருண்டைகள், கேழ்வரகு களி, பச்சைப்பயிறு ஆகியவற்றுடன் உடலுக்கு வலுவூட்டும் சத்து மாத்திரைகள் ஆகியவற்றை உட்கொண்ட யானைகள் மாலையிலும் வழக்கம் போல் நடைபயிற்சி செய்து நீராடி தத்தம் இடங்களுக்குச் சென்று ஓய்வெடுக்கத் தொடங்கின.

